II பேதுரு - முன்னுரை

காலமும் இடமும்

கியி. 61-65 ஆம் ஆண்டில் பாபிலோனிலிருந்து இந்த நிருபம் எழுதப்பட்டது.

ஆசிரியர்

சீமோன் பேதுரு (2பேதுரு 1:1)

மையக்கருத்து

1. 1பேதுரு நிருபம் யாருக்கு எந்த நோக்கத்திற்காக எழுதப்பட்டதோ அவர்களுக்கே அந்த நோக்கத்திற்காக 2பேதுரு நிருபமும் எழுதப்பட்டிருக்கிறது. (2பேதுரு 3:1) விசுவாசிகள் தங்களுக்கு வரும் பாடுகளிலும் தேவனிடத்தில் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். தேவனுடைய கிருபையைப் பற்றிக் கொள்ள வேண்டும். (1பேதுரு 5:12)

2. கடைசி நாட்களில் நடைபெறப் போகிற சம்பவங்களைப் பேதுரு இந்த நிருபத்தில் முன்னறிவிக்கிறார். நோவாவின் காலத்தில் ஜலத்தினால் பூமி அழிக்கப்பட்டதுபோல, இப்பொழுதுள்ள உலகம் அக்கினியினால் அழிக்கப்படப் போவதைப் பற்றி பேதுரு விளக்கிக் கூறுகிறார். (2பேதுரு 3:1-13).

3. இந்த நிருபமும், 2தெசலோனிக்கேயர், 1தீமோத்தேயு, 2தீமோத்தேயு, யூதா, வெளிப்படுத்தின விசேஷம் ஆகிய புஸ்தகங்களும் பல விஷயங்களில் ஒத்திருக்கிறது. கடைசி நாட்களில் காணப்படும் வேதப்புரட்டை இவை விளக்குகின்றன. வெளிப்படுத்தின விசேஷத்தில் அந்திக்கிறிஸ்துவின்கீழ் சத்தியம் எவ்வாறு புரட்டப்படும் என்பது விளக்கப் பட்டிருக்கிறது. (வெளி 6:1-20:3=2தெச 2:1-12; 1தீமோ 4:1-8; 2தீமோ 3:1-13; 2தீமோ 4:1-6; 2பேதுரு 2:1-3:9; யூதா 1:3-19).

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 3

வசனங்கள் - 61

கேள்விகள் - 2

புதிய தீர்க்கதரிசனங்கள் - 7

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 51

பொருளடக்கம்

I. ஆசிரியரும் வாழ்த்துரையும் (1:1-2)

II. கிறிஸ்தவ நீதிகள்

1. தேவனுடைய முழுமையான பராமரிப்பு (1:3)
2. சுவிசேஷத்தின் அநுகூலங்கள் (1:4)
3. கூட்டி வழங்க வேண்டியவை - எட்டு கிறிஸ்தவ நீதிகள் (1:5-11)

III. பேதுருவின் மூன்று அம்ச சாட்சி

1. தன்னைப் பற்றி (1:12-15)
2. இயேசு கிறிஸ்துவைப் பற்றி (1:16-18)
3. வேதவாக்கியங்களைப் பற்றி (1:19-21)

IV. கள்ளத்தீர்க்கதரிசிகளும் கள்ளப் போதகர்களும்

1. அவர்களுடைய கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுக்கள் (2:1)
2. அவர்களைப் பின்பற்றுவோரின் நடக்கைகளும் நியாயத்தீர்ப்பும் (2:2-3)
3. வேதப்புரட்டர்களின் நியாயத்தீர்ப்பு - எடுத்துக்காட்டுக்கள் (2:4-6)
4. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியானது (2:7-9)
5. கள்ளப்போதகர்களின் அடையாளங்கள்

II பேதுரு - முன்னுரை

(1) அசுத்த இச்சைகளும் கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணுவதும் (2:10-11)

(2) வஞ்சனையில் உல்லாசமாய் வாழ்கிறவர்கள் (2:12-13)

(3) பொருளாசையுடையவர்கள் - இரக்கமற்றவர்கள் (2:14)

(4) இவர்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் காரியம் (2:15-17)

(5) மனுஷரின் தந்திரம் (2:18)

(6) நிலையில்லாத ஆத்துமாக்களை தந்திரமாய் பிடிக்கிறார்கள் (2:19)

(7) கள்ளப்போதகர்களுக்கு இரட்சிப்பின் நம்பிக்கையில்லை (2:20-22)

V. கர்த்தருடைய நாள்

1. நிருபத்தின் நோக்கம் (3:1-2)
2. கிறிஸ்துவின் வருகையை மறுதலிக்கும் பரியாசக்காரர் (3:3-4)
3. பரியாசக்காரர் பூர்வகாலத்தை அறியாதிருக்கிறார்கள் (3:5-7)
4. கர்த்தருக்கு ஒரு நாளும் ஆயிரம் வருஷமும் (3:8-9)
5. அக்கினியினால் புதுப்பிக்கப்படுதல் (3:10-13)
6. கர்த்தருடைய நாளின் நிமித்தமாக ஆலோசனைகள் (3:14)
7. சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது (3:15-16)
8. பின்வாங்கிப்போவதற்கு எதிராக இரண்டு கட்டளைகள் (3:17-18)

II பேதுரு - தொகுப்புரை

1 அதிகாரம்

I. ஆசிரியரும் வாழ்த்துரையும்

2பேதுரு 1:1 நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய நீதியால் எங்களைப் போல அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு, இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனுமாகிய சீமோன் பேதுரு எழுதுகிறதாவது;

2பேதுரு 1:2 தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது.

"ஊழியக்காரன்" - (1பேதுரு 5:1)

"இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலன்" - (அப் 15:33)

அருமையான (precious) - ἰσότιμος - isotimos - 2472

பெயரடை - அருமையான (equal honor) - விசுவாசம் அருமையானது. விலையேறப் பெற்றது.

"தேவனுடைய நீதி" - அருமையான விசுவாசம் தேவனுடைய நீதியினாலும், அவருடைய மீட்பின் திட்டத்தினாலும் வருகிறது. (ரோமர் 10:17).

"இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்து" - கிரேக்க மொழியில் "நம்முடைய தேவனும், இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்து" என்றுள்ளது. பிதாவும், பரிசுத்த ஆவியானவரும் திரித்துவத்தில் தனித்தனியாகத் தேவத்துவப் பண்புடையவர்களாக இருப்பதுபோலவே இயேசு கிறிஸ்துவும் தேவத்துவப் பண்புடையவராக இருக்கிறார் என்பதைப் பேதுரு இங்கு வலியுறுத்திக் கூறுகிறார்.

இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சத்தியங்கள்

1. பேதுருவின் எஜமான் - பேதுரு கிறிஸ்துவின் ஊழியக்காரன். (2பேதுரு 1:2)
2. பேதுருவை அப்போஸ்தலனாக அழைத்தவர். (மாற்கு 3:14-19)
3. அருமையான விசுவாசத்திற்கு ஆதாரமாக இருக்கிறவர். (அப் 3:16)
4. நீதிக்கு ஆதாரமாக இருக்கிறார். (1கொரி 1:30)
5. தேவனாக இருக்கிறவர். (யோவான் 1:1-2)
6. இரட்சகராக இருக்கிறவர். (யோவான் 4:42; அப் 5:31)
7. கிருபைக்கு ஆதாரமாக இருக்கிறவர். (யோவான் 1:16-17)
8. சமாதானத்திற்கு ஆதாரமாக இருக்கிறவர். (ரோமர் 5:1; எபே 2:14)
9. அறிவுக்கும், ஞானத்திற்கும் பிதாவாகிய தேவனோடு ஆதாரமாக இருக்கிறவர். (எபே 1:17; எபே 4:13)
10. பிதாவாகிய தேவனைப்போல தனியாக ஆள்தத்துவப் பண்புடையவர். (2பேதுரு 1:2; 1யோவான் 5:7)

II. கிறிஸ்தவ நீதிகள் - (1:3-11)

1. தேவனுடைய முழுமையான பராமரிப்பு - (யோவான் 14:12; அப் 1:8; ரோமர் 15:29; எபே 3)

2பேதுரு 1:3 தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி,

திவ்வியம் (divine) - θεῖος - theios – 2304

II பேதுரு - தொகுப்புரை

1 அதிகாரம்

பெயரடை - தேவனுடைய சந்ததி, பரிசுத்தம், மாசற்றது **(that which belongs to the Godhead)** (2பேதுரு 1:4; அப் 17:29)

வல்லமை **(power)** - **δύναμις** - **dynamis** - 1411

பெண்பால் பெயர்ச்சொல் - வல்லமை, பலத்த செய்கைகள், அற்புதங்கள், திறமை, பலம், சத்துவம், சக்தி, கருத்து, உக்கிரம், மிகுதி **(inherent power; power to reproduce itself, like a dynamo)** **"power"** (2பேதுரு 1:3,16; மத் 6:13; மத் 22:29; மத் 24:29-30; மத் 26:64; மாற்கு 9:1; மாற்கு 12:24; மாற்கு 13:25-26; மாற்கு 14:62; லூக்கா 1:17,35; லூக்கா 4:14,36; லூக்கா 5:17; லூக்கா 9:1; லூக்கா 10:19; லூக்கா 21:26,27; லூக்கா 22:69; லூக்கா 24:49; அப் 1:8; அப் 3:12; அப் 4:7,33; அப் 6:8; அப் 8:10; அப் 10:38; ரோமர் 1:4,16,20; ரோமர் 8:38; ரோமர் 9:17; ரோமர் 15:13,19; 1கொரி 1:18,24; 1கொரி 2:4-5; 1கொரி 4:19-20; 1கொரி 5:4; 1கொரி 6:14; 1கொரி 15:24,43; 2கொரி 4:7; 2கொரி 6:7; 2கொரி 8:3; 2கொரி 12:9; 2கொரி 13:4; எபே 1:19; எபே 3:7,20; பிலி 3:10; 1தெச 1:5; 2தெச 1:11; 2தெச 2:9; 1தீமோ 1:7-8; 1தீமோ 3:5; எபி 1:3; எபி 6:5; எபி 7:16; 1பேதுரு 1:5; 1பேதுரு 3:22; வெளி 4:11; வெளி 5:12; வெளி 7:12; வெளி 11:17; வெளி 13:2; வெளி 15:8; வெளி 17:13; வெளி 19:1); **"ability"** (மத் 25:15); **"strength"** (1கொரி 15:56; 2கொரி 1:8; 2கொரி 12:9; எபி 11:11; வெளி 1:16; வெளி 3:8; வெளி 12:10); **"might"** (எபே 1:21; எபே 3:16; கொலோ 1:11; 2பேதுரு 2:11); **"mighty"** (ரோமர் 15:19; 2தெச 1:7); **"mightily"** (கொலோ 1:29); **"mighty work"** (மத் 11:20,21,23; மத் 13:54,58; மத் 14:2; மாற்கு 6:2,5,14; லூக்கா 10:13; லூக்கா 19:37); **"mighty deed"** (2கொரி 12:12); **"wonderful work"** (மத் 7:22); **"miracle"** (மாற்கு 9:39; அப் 2:22; அப் 8:13; அப் 19:11; 1கொரி 12:10,28; கலா 3:5; எபி 2:4 **"worker of miracles"** (1கொரி 12:29); **"abundance"** (வெளி 18:3); **"violence"** (எபி 11:34); **"virtue"** (மாற்கு 5:30; லூக்கா 6:19; லூக்கா 8:46); **"meaning"** (1கொரி 14:11).

"ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும்" - இயேசு கிறிஸ்துவின் திவ்விய வல்லமையானது நமக்கு ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் தருகிறது. இது தேவனை அறிகிற அறிவினாலே உண்டாயிருக்கிறது.

"தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும்" - தேவன் தம்முடைய பிள்ளைகளைத் தமது மகிமையினாலும், காருணியத்தினாலும் அழைக்கிறார்.

2. சுவிசேஷத்தின் அநுகூலங்கள் - (2கொரி 1:20; மத் 7:7-11; 17:20; 21:22; மாற்கு 9:23; 11:)

2பேதுரு 1:4 இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

"மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" - (2பேதுரு 1:3).

II பேதுரு - தொகுப்புரை

1 அதிகாரம்

வாக்குத்தத்தங்களின் ஆசீர்வாதங்கள்

1. அருமையான விசுவாசம் (2பேதுரு 1:1; ரோமர் 10:17)
2. நீதி (2பேதுரு 1:1; 1கொரி 1:30)
3. கிருபையும், சமாதானமும் (2பேதுரு 1:2)
4. ஜீவனுக்கும், தேவபக்திக்கும் வேண்டிய யாவும் (2பேதுரு 1:3; தீத்து 2:11-12)
5. மகிமையும், காருணியமும் (2பேதுரு 1:3)
6. திவ்விய சுபாவம் (2பேதுரு 1:4)
7. உலகத்திலுண்டான கேட்டுக்கும் இச்சைக்கும் தப்புதல் (2பேதுரு 1:4)

"இச்சையினால் உலகத்திலுண்டான கேடு" - (ரோமர் 8:21)

3. கூட்டி வழங்க வேண்டியவை - எட்டு கிறிஸ்தவ நீதிகள்

2பேதுரு 1:5 இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும்,

2பேதுரு 1:6 ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சை யடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும்,

2பேதுரு 1:7 தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்.

2பேதுரு 1:8 இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது.

2பேதுரு 1:9 இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப் பட்டதை மறந்து கண் சொருகிப் போன குருடனாயிருக்கிறான்.

2பேதுரு 1:10 ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை.

2பேதுரு 1:11 இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட் படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்.

"இப்படியிருக்க" - அருமையான விசுவாசத்தைப் பெற்றதோடு. (2பேதுரு 1:1).

ஆவிக்குரிய முன்னேற்றம் பெறுவதற்கு நாம் கூட்டவேண்டிய காரியங்கள்

1. விசுவாசத்தோடே தைரியத்தைக் கூட்ட வேண்டும்.
2. தைரியத்தோடே ஞானத்தைக் கூட்ட வேண்டும் (2பேதுரு 1:5)
3. ஞானத்தோடே இச்சையடக்கத்தைக் கூட்ட வேண்டும் (கலா 5:22)
4. இச்சையடக்கத்தோடே பொறுமையைக் கூட்ட வேண்டும்
5. பொறுமையோடே தேவபக்தியைக் கூட்ட வேண்டும் (1தீமோ 3:16)
6. தேவபக்தியோடே சகோதரசிநேகத்தைக் கூட்ட வேண்டும்
7. சகோதரசிநேகத்தோடே அன்பைக் கூட்ட வேண்டும் (1கொரி 13:4)

II பேதுரு - தொகுப்புரை

1 அதிகாரம்

"உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது" - 2பேதுரு 1:5-7 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற காரியங்கள் நமக்கு உண்டாயிருந்து பெருகினால் நாம் இயேசு கிறிஸ்துவிற்குள் கனி தருகிற ஜீவியம் ஜீவிப்போம். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் பின்மாற்றம் காணப்படாது. (2பேதுரு 1:8-10).

"கண் சொருகிப்போன குருடனாயிருக்கிறான்" - 2பேதுரு 1:5-7 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற காரியங்கள் இல்லாதவன் தன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் பின்வாங்கிப் போனவன். அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப் பட்டதை மறந்து விட்டவன். இந்த வாக்கியத்தின் மூலமாக 2பேதுரு 1:3-7 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் கிருபைகளையும், அநுபவங்களையும் பெற்றவர்கள்கூட தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் எச்சரிப்போடு இருக்க வில்லையென்றால் அவர்கள் பின்வாங்கிப் போவதற்கு வாய்ப்புள்ளது என்பது தெரியவருகிறது. தேவனுடைய அன்பை ருசிபார்த்தும், இப்போது தேவனைவிட்டு பின் வாங்கிப்போனவர்கள் கண் சொருகிப்போன குருடரைப்போல இருக்கிறார்கள்.

"உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்" - 2பேதுரு நிருபத்தில் ஆவிக்குரிய ஜீவியத்தில் விசுவாசிகள் ஜாக்கிரதையாக ஜீவிக்க வேண்டுமென்று பேதுரு இரண்டாம் முறையாக எச்சரித்துக் கூறுகிறார். விசுவாசிகள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறவர்கள் அவருடைய கிருபையை இழந்துபோவார்கள். (2பேதுரு 1:5,10).

"இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை" - இவைகளைச் செய்யாவிட்டால் நீங்கள் இடறிவிழுவீர்கள் என்பது இதன் பொருளாகும்.

"இடறிவிழுதல்" - (ரோமர் 11:11)

இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் நமக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படுவதற்கு நாம் செய்ய வேண்டிய காரியங்கள்

1. அருமையான விசுவாசத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (2பேதுரு 1:1).
2. கிருபையிலும் சமாதானத்திலும் பெருக வேண்டும். (2பேதுரு 1:2).
3. திவ்விய வல்லமையினால் தேவபக்தியோடு ஜீவிக்க வேண்டும். (2பேதுரு 1:3; 1பேதுரு 1:5-13).
4. திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாக இருக்கவேண்டும். (2பேதுரு 1:4).
5. இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்ப வேண்டும். (2பேதுரு 1:4).
6. 2பேதுரு 1:5-7 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் கிருபைகளைக் கூட்ட வேண்டும்.
7. கிருபைகள் பெருக வேண்டும். (2பேதுரு 1:8).
8. தேவனை அறிகிற அறிவில் கனியுள்ளவர்களாக இருக்க வேண்டும். (2பேதுரு 1:8).
9. முன்செய்த பாவங்களிலிருந்து விலகி ஜீவிக்க வேண்டும். (2பேதுரு 1:9).
10. தேவனுடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கிக் கொள்ள வேண்டும். (2பேதுரு 1:10).

"பிரவேசம்" - ரோமப்பேரரசில் யுத்தத்தில் வெற்றி பெற்ற படைத் தளபதிகளைப் பாராட்டுவதற்கு அவர்களை வெற்றிப் பவனியாக அழைத்து வரும் வழக்கம் இருந்தது. அப்படிப்பட்ட பிரவேசம் இந்த வசனத்தில் ஒப்புமையாகக் கூறப்பட்டிருக்கிறது. (2கொரி 2:14).

II பேதுரு - தொகுப்புரை

1 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 1

"இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யம்" (2பேதுரு 1:11) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

கிறிஸ்துவின் ராஜ்யம் நித்தியமானதாக இருக்கும். (ஏசா 9:6-7; தானி 2:44-45; தானி 7:13-14,27; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 22:4-5). பூமியில் எல்லாக் கலகங்களையும் தமது பாதபடியாக்கிப் போட்ட பின்பு, இயேசு கிறிஸ்து பூமியை ஆயிர வருஷம் ஆட்சி செய்வார். அதன் பின்பு புதுப்பிக்கப்பட்டு பூரணமாக இருக்கும் பூமியை இயேசு கிறிஸ்து நித்திய காலமாக ஆளுகை செய்வார். (1கொரி 15:24-28; எபே 1:10; வெளி 5:10; வெளி 20:1-10).

III. பேதுருவின் மூன்று அம்ச சாட்சி

1. தன்னைப் பற்றி

2பேதுரு 1:12 இதினிமித்தம், இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப் பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன்.

2பேதுரு 1:13 நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எனக்கு அறிவித்தபடி நான் என் கூடாரத்தைவிட்டுப்போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து,

2பேதுரு 1:14 இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும் உங்களை நினைப்பூட்டி எழுப்பிவிடுவது நியாயமென்று எண்ணுகிறேன்.

2பேதுரு 1:15 மேலும் நான் சென்றுபோனபின்பு இவைகளை நீங்கள் எப்பொழுதும் நினைத்துக்கொள்ள ஏதுவுண்டாயிருக்கும்படி பிரயத்தனம் பண்ணுவேன்.

"உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன்" - நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் நமக்குப் பூரணமாய் அளிக்கப்படவேண்டும். ஆகையினால் விசுவாசிகள் ஏற்கெனவே கேட்டும், அறிந்தும் இருக்கும் சத்தியத்தில் எப்பொழுதும் உறுதிப்பட்டிருக்க வேண்டும். ஆகையினால் பேதுரு இந்தச் சத்தியங்களை விசுவாசிகளுக்கு எப்பொழுதும் நினைப்பூட்டிக்கொண்டே இருக்கிறார். இதில் அவர் அசதியடைவதில்லை.

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எனக்கு அறிவித்தபடி" - யோவான் 21:18-19 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்து பேதுருவைப் பற்றி முன்னறிவித்திருக்கும் காரியங்கள்.

"இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும்" - விசுவாசிகளுக்கு சுவிசேஷத்தின் சத்தியத்தை நினைப்பூட்டுவதற்குப் பேதுரு தன்னுடைய சரீரத்தில் ஜீவனுள்ளவராக இருப்பது அவசியம். தான் உயிரோடு இருக்குமளவும் நித்திய ராஜ்யத்திற்குட்படும் பிரவேசத்தைக் குறித்து பேதுரு விசுவாசிகளுக்கு நினைப்பூட்டி எழுப்பிவிட்டுக் கொண்டிருப்பார். (2பேதுரு 1:11; யோவான் 6:27).

"கூடாரம்" **(tabernacle)** - மனுஷனுடைய சரீரம். (2பேதுரு 1:13-14; 2கொரி 5:1-9).

பிரயத்தனம் பண்ணு **(endeavour)** - **σπουδάζω - spoudazoo** – 4704

பெயரடை - கருத்தோடிரு, ஜாக்கிரதையாயிரு, பிரயத்தனம் பண்ணு **(to be diligent; zealous; earnest)** (எபே 4:3) **" diligent"** (2பேதுரு 1:10; 2பேதுரு 3:14 - நித்திய ஜீவனுக்காக நியமிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளை விசுவாசிகள் எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். இதுவே பேதுருவின் பிரயத்தனம்.

II பேதுரு - தொகுப்புரை

1 அதிகாரம்

"நீங்கள் எப்பொழுதும் நினைத்துக்கொள்ள ஏதுவுண்டாயிருக்கும் படி" - நித்திய ஜீவனுக்குள் பிரவேசம் பண்ணுவதற்கு விதிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளை விசுவாசிகள் எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று பேதுரு இங்கு மூன்றாம் முறையாகக் கூறுகிறார். (2பேதுரு 1:12,13,15; 2பேதுரு 3:1; 2பேதுரு 1:11; யோவான் 6:27). ஒருவர் இயேசு கிறிஸ்துவைத் தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டால் போதும் மற்றதை தேவன் பார்த்துக் கொள்வார். நித்திய ஜீவனுக்குள் பிரவேசித்து விடலாம் என்று ஒருசிலர் கூறுகிறார்கள். நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பதற்குத் தேவன் விசுவாசிகளுக்கு ஒருசில நிபந்தனைகளைக் கொடுத்திருப்பதாகவும், விசுவாசிகள் அதற்கு அவசியம் கீழ்ப்படிய வேண்டுமென்றும் பேதுரு இந்த நிருபத்தில் வலியுறுத்திக் கூறுகிறார். இரட்சிக்கப்பட்ட ஒரு விசுவாசி தன்னுடைய துன்மார்க்கத்தினால் தேவனை விட்டு பின்வாங்கிப் போனதற்குத் தேவனைக் காரணம் சொல்லக்கூடாது. தன்னுடைய பின்மாற்றத்திற்குத் தானே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

2. இயேசு கிறிஸ்துவைப் பற்றி

2பேதுரு 1:16 நாங்கள் தந்திரமான கட்டுக் கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம்.

2பேதுரு 1:17 இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் மகிமையையும் பெற்றபோது,

2பேதுரு 1:18 அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக் கேட்டோம்.

"தந்திரமான கட்டுக்கதைகள்" - புறஜாதியார் தங்களுடைய தெய்வங்களைக் குறித்து பலவிதமான கட்டுக்கதைகளைத் தந்திரமாகக் கூறுகிறார்கள். இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சத்தியம் கட்டுக்கதைகளல்ல. இயேசு கிறிஸ்துவையும், அவருடைய மறுரூபமாதலையும் பேதுருவும், மற்றவர்களும் கண்ணாரக் கண்டவர்கள். (2பேதுரு 1:16-18).

"அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம்" - இந்தப் பூமியில் தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு இயேசு கிறிஸ்து தம்முடைய வல்லமையோடும், மகிமையோடும் வருவார். மறுரூப மலையில் இயேசு கிறிஸ்து மறுரூபமான நிகழ்ச்சி இதை உறுதிபண்ணுகிறது. (மத் 16:27-28; மத் 17:1-8; மத் 24:29-31; மத் 25:31-46; வெளி 19:11-21).

"அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக் கேட்டோம்" - மூன்று சீஷர்கள் தேவனுடைய சப்தத்தைக் கேட்டார்கள். அவருடைய மகிமையைக் கண்டார்கள். மோசே, எலியா ஆகியோரையும் கண்டார்கள். (மத் 17:1-8).

3. வேதவாக்கியங்களைப் பற்றி

2பேதுரு 1:19 அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்.

2பேதுரு 1:20 வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாய் இராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது.

II பேதுரு - தொகுப்புரை

1 அதிகாரம்

2பேதுரு 1:21 தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்தஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.

"அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனம்" - புறஜாதியாருடைய தந்திரமான கட்டுக் கதைகளை விட உறுதியான தீர்க்கதரிசன வசனங்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கு உள்ளது. (1பேதுரு 4:11)

தீர்க்கதரிசன எண் - 2

"பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்." (2பேதுரு 1:19) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிப்பிடுகிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மறுரூப மலையில் நிழலாகப்பட்டது. (எண் 24:17, மல் 4:2)

"நீங்கள் முந்தி அறியவேண்டியது" - வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராது. இதை ஒவ்வொரு விசுவாசியும் முதலாவது அறிந்திருக்க வேண்டும். எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளை உடையதல்ல. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்தஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள். (2பேதுரு 1:20-21).

சுய (private) - ἴδιος - idios - 2398

பெயரடை - தம்முடைய, தன்னுடைய, சொந்த, அதனதனுடைய, சுய (one's own; personal; private)

தோற்றம் (interpretation) - ἐπίλυσις - epilysis - 1955

பெண்பால் பெயர்ச்சொல் - தோற்றம் - தீர்க்கதரிசியினுடைய சொந்த எண்ணம்.

ஏவப்படுதல் (moved by) - φέρω - pheroo - 5342

வினைச்சொல் - கொண்டு வா, கொண்டுபோ, சுமந்து கொள், பலன் தா, கொடு, சாட்டு, நீட்டு, அடி, தாங்கு பொறுமையாயிரு, உண்டாக்கு, அளி, ஏவு, சகி to bear along (யோவான் 21:18). தீர்க்கதரிசிகள் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு பேசினார்கள். இயேசு கிறிஸ்துவிற்கு உண்டான பாடுகளையும், அவைகளுக்குப் பின்பு அவருக்கு வரும் மகிமைகளையும் முன்னறிவித்தார்கள். அந்தக் காலத்தைக் குறித்தும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள். (1பேதுரு 1:10-12).

2 அதிகாரம்

IV. கள்ளத்தீர்க்கதரிசிகளும் கள்ளப் போதகர்களும்

1. அவர்களுடைய கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுக்கள்

2பேதுரு 2:1 கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப் போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள்.

தீர்க்கதரிசன எண் - 3

"கள்ளத் தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்..........." (2பேதுரு 2:1-3) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

கள்ளத் தீர்க்கதரிசி (false prophets) - ψευδοπροφήτης - pseudopropheetees - 5578

ஆண்பால் பெயர்ச்சொல் - கள்ளத் தீர்க்கதரிசி (2பேதுரு 2:1; மத் 7:15, மத் 24:11,24; மாற்கு 13:22; லூக்கா 6:26; அப் 13:6; 1யோவான் 4:1; வெளி 16:13; வெளி 19:20; வெளி 20:10).

கள்ளப்போதகர் (false teachers) - ψευδοδιδάσκαλος - pseudodidaskalos - 5572

ஆண்பால் பெயர்ச்சொல் - கள்ளப்போதகர் (2கொரி 11:26; கலா 2:4, 2பேதுரு 2:1)

"அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப் பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து" - கேட்டுக்கு ஏதுவான வேதப்புரட்டுக்கள் மனுஷருடைய ஆத்துமாவை அழித்துப்போடும். (அப் 5:17).

"தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவர்" - (அப் 20:28; 1கொரி 6:19-20; 1பேதுரு 1:18)

2. அவர்களைப் பின்பற்றுவோரின் நடக்கைகளும் நியாயத்தீர்ப்பும்

2பேதுரு 2:2 அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும்.

2பேதுரு 2:3 பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக் கொள்ளுவார்கள்; பூர்வகாலமுதல் அவர்களுக்கு விதிக்கப் பட்ட ஆக்கினை அயர்ந்திராது, அவர்களுடைய அழிவு உறங்காது.

"கெட்ட நடக்கைகள்" (pernicious ways) - கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுக்கள். ஒருசில பதிப்புக்களில் அவர்களுடைய மாம்சத்தின் இச்சைகள் **"follow their lasciviousness"** என்னும் பொருள்பட எழுதப் பட்டிருக்கிறது.

"அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும்" - மாம்ச இச்சைகளும், வேதப்புரட்டுக்களும் திரளான ஜனங்களை அழித்துப்போடும்.

"பொருளாசை உடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக் கொள்ளுவார்கள்" - தங்களுடைய ஆசை இச்சைகளை நிறைவேற்றுவதற்காகக் கெட்ட நடக்கைகளை உடையவர்கள் பொருளாசையுடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் தந்திரமான உபதேசங்களைப் பேசி, ஜனங்களை வஞ்சிப்பார்கள்.

2 அதிகாரம்

"பூர்வகாலமுதல் அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஆக்கினை அயர்ந்திராது, அவர்களுடைய அழிவு உறங்காது" - அவர்களுடைய அழிவைத் தேவன் ஏற்கெனவே முன்குறித்திருக்கிறார். அவர்களுக்கு அழிவு நிச்சயம்.

3. வேதப்புரட்டர்களின் நியாயத் தீர்ப்பு - எடுத்துக்காட்டுக்கள்

2பேதுரு 2:4 பாவஞ்செய்த தூதர்களை தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக் கொடுத்து;

2பேதுரு 2:5 பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி;

2பேதுரு 2:6 சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப் போட்டு, ஆக்கினைக் குள்ளாகத் தீர்த்து, பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளைத் திருஷ்டாந்தமாக வைத்து;

நியாயத்தீர்ப்புக்கு முன்மாதிரிகள் (யூதா 1:5-7)

1. பாவம் செய்த தூதர்கள். **(Fallen angels)** (2பேதுரு 2:4)
2. ஜலப்பிரளயத்திற்கு முந்தி ஜீவித்தவர்கள்.(**The antedeluvians**) (2பேதுரு 2:5; ஆதி 6-8)
3. சோதோமும், கொமோராவும் (**Sodom and Gomorrah**) (2பேதுரு 2:6; ஆதி 19)

லூசிபர் ஆதாமின் காலத்திற்கு முன்பு பூமியில் ஆளுகை செய்தான். தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணினான். பாவம் செய்த தூதர்கள் லூசிபரோடு சேர்ந்து கலகம் பண்ணினார்கள். (ஆதி 1:1-2; ஏசா 14:12-14; எசே 28:11-17; எரே 4:23-26; 2பேதுரு 3:5-8; மத் 13:35, லூக்கா 10:18)

"பாவஞ்செய்த தூதர்கள்" - இந்தத் தூதர்கள் என்ன பாவம் செய்தார்கள் என்று இந்த வசனம் எதுவும் கூறவில்லை. யூதா 1:6-7, ஆதி 6:1-4 ஆகிய வசனங்கள் தூதர்களுடைய துன்மார்க்கமான ஜீவியத்தைப் பற்றிக் கூறுகிறது. அவர்கள் தங்கள் சுபாவத்திற்கு விரோதமாக மனுஷருடைய குமாரத்திகளோடு விபச்சாரம் பண்ணினார்கள். ஆகையினால் தேவன் பாவஞ்செய்த தூதர்களைத் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக் கொடுத்தார். நரகத்தில் தள்ளப்பட்டிருக்கும் தூதர்களை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒரு பிரிவினர் அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டப் பட்டிருக்கிறார்கள். மற்றொரு பிரிவினர் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக தானியேலின் எழுபதாவது வாரத்தின் மத்தியில் தேவனோடு யுத்தம் பண்ணுவதற்காகச் சாத்தானோடு வரக்கூடியவர்கள். (வெளி 12:7-17).

நரகம் **(hell)** - ταρταρόω - **tartarooo** - 5020

பெயர்ச்சொல் - நரகம் **(a dark abyss; a place of punishment)**

நரகத்தைப் பற்றிய செய்திகள்

1. தேவதூதர்களுக்குச் சிறைச்சாலை. (2பேதுரு 2:4)
2. பூமியின் கீழுள்ளது. (2பேதுரு 2:4)
3. நியாயத்தீர்ப்பு வரையிலும் பாவம் செய்த தூதர்கள் சிறை வைக்கப்படும் இடம். (2பேதுரு 2:4; வெளி 20:11-15; யூதா 1:6)
4. இயேசு கிறிஸ்து நரகத்திற்குச் சென்ற போது இந்த இடத்தைப் பார்த்தார். (சங் 16:10; 1பேதுரு 3:19)
5. அந்தகாரமான இடம் (யூதா 1:6-7)

2 அதிகாரம்

6. நித்திய அக்கினியுள்ள இடம். (யூதா 1:7)

7. ஆக்கினை அடையும் இடம். (யூதா 1:7)

சங்கிலி **(chain)** - **σειρά** - **seira** - 4577

பெண்பால் பெயர்ச்சொல் - சங்கிலி **(a cord; rope; chain, literal chains)**

கட்டு **(band)** - **δεσμός** - **desmos** - 1199

ஆண்பால் பெயர்ச்சொல் - கட்டு, விலங்கு **(a band; fetter; halter; imprisonment) "band"** (லூக்கா 8:29; அப் 16:26; அப் 22:30); **"string"** (மாற்கு 7:35); **"bond"** (லூக்கா 13:16; அப் 20:23; அப் 23:29; பிலி 1:7, 13, 14, 16; கொலோ 4:18; 2தீமோ 2:9; பிலே 10,13; எபி 10:34; எபி 11:36); **"chain"** (யூதா 1:6). சாத்தானால் கட்டப்படுதல் (மாற்கு 7:35; லூக்கா 13:16). பாவம் செய்த தூதர்கள் கட்டப்படுதல். (வெளி 9:1-2,14; வெளி 20:1-3,7,10)

அந்தகாரம் **(darkness)** - **ζόφος** - **zophos** - 2217

ஆண்பால் பெயர்ச்சொல் - அந்தகாரம், காரிருள் **(under darkness)** (2பேதுரு 2:17; யூதா 1:6, 13) இது ஆவிக்குரிய அந்தகாரத்தைக் குறிப்பிடாமல் பூமிக்குரிய அந்தகாரத்தைக் குறிப்பிடும்.

"பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல்" - நோவா முதலான எட்டுப்பேரைத் தேவன் காப்பாற்றினார். ஆதி 6:1-8:22 ஆகிய வசனங்கள் இந்த நிகழ்ச்சியை விவரித்துக் கூறுகிறது.

"சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப் போட்டு" - ஆதியாகமம் 19 ஆவது அதிகாரம் இந்த நிகழ்ச்சியை விவரித்துக் கூறுகிறது.

"பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளைத் திருஷ்டாந்தமாக வைத்து" - தேவன் தேவதூதர்களையும் ஜலப்பிரளயத்தின் காலத்திற்கு முந்தினவர்களையும் சோதோம், கொமோரா பட்டணத்தாரையும் தப்பவிடாமல் தம்முடைய நியாயத்தீர்ப்பிற்கு உட்படுத்தினார். அதே தேவன் தற்காலத்திலும் துன்மார்க்கரைத் தப்பவிடாமல் தம்முடைய நியாயத்தீர்ப்பிற்குட் படுத்துவார். (2பேதுரு 2:9-22).

4. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியானது

2பேதுரு 2:7 அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில் அவர்களுடைய காமவிகார நடக்கையால் வருத்தப்பட்டு,

2பேதுரு 2:8 நாள் தோறும் அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க;

2பேதுரு 2:9 கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக் உள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்.

காமவிகாரம் **(filthy)** - **ἀσέλγεια** - **aselgeia** - 766

பெண்பால் பெயர்ச்சொல் - காமவிகாரம் **(licentiousness, lustfulness)**

நடக்கை **(conversation)** - **ἀναστροφή** - **anastrophee** – 391

II பேதுரு - தொகுப்புரை

2 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் - நடக்கை, நடத்தை, நடந்துகொள்ளுதல் **(conduct)** (1பேதுரு 2:12).

"கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும்" - தேவபக்தியுள்ளவருக்கும் சோதனை வரும். ஆயினும் அந்தச் சோதனையிலிருந்து கர்த்தர் அவர்களை இரட்சிப்பார். (1கொரி 10:13; யாக் 1:2,12-15; 1பேதுரு 1:7; 1பேதுரு 4:12).

தீர்க்கதரிசன எண் - 4

"அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்" (2பேதுரு 2:9) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

5. கள்ளப் போதகர்களின் அடையாளங்கள்

(1) அசுத்த இச்சைகளும் கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணுவதும்

2பேதுரு 2:10 விசேஷமாக அசுத்த இச்சையோடே மாம்சத்திற்கேற்றபடி நடந்து, கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணுகிறவர்களை அப்படிச் செய்வார். இவர்கள் துணிகரக்காரர், அகங்காரிகள், மகத்துவங்களைத் தூஷிக்க அஞ்சாதவர்கள்.

2பேதுரு 2:11 அதிக பெலனையும் வல்லமையையுமுடைய தேவதூதர்கள் முதலாய்க் கர்த்தருக்குமுன்பாக அவர்களைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தமாட்டார்களே.

ஆண்புணர்ச்சிக்காரரின் பாவங்கள்

1. அசுத்த இச்சையோடே மாம்சத்திற்கேற்றபடி நடந்து கொள்கிறார்கள். (2பேதுரு 2:10; ரோமர் 1)
2. கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணுகிறார்கள். (2பேதுரு 2:10).
3. இவர்கள் துணிகரக்காரராய் இருக்கிறார்கள். (2பேதுரு 2:10).
4. இவர்கள் அகங்காரிகளாய் இருக்கிறார்கள். (2பேதுரு 2:10).
5. மகத்துவங்களைத் தூஷிக்க அஞ்சாதவர்கள் (2பேதுரு 2:10).
6. மிருகஜீவன்களைப் போல ஜீவிக்கிறார்கள். (2பேதுரு 2:12).
7. தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூஷிக்கிறார்கள். (2பேதுரு 2:12).
8. ஒரு நாள் வாழ்வை இன்பமென்றெண்ணி, வெட்கப்படாமல் வெளிப்படையாகப் பாவம் செய்கிறார்கள். (2பேதுரு 2:13).
9. தங்கள் வஞ்சனையில் உல்லாசமாய் வாழ்கிறார்கள். (2பேதுரு 2:13).
10. விபச்சார மயக்கத்தால் மயங்கியிருக்கிறார்கள். (2பேதுரு 2:14).
11. உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடிக்கிறார்கள். (2பேதுரு 2:14).
12. செம்மையான வழியை விட்டுத் தப்பி நடக்கிறார்கள். (2பேதுரு 2:15-22).
13. பொருளாசையில் பழகினவர்கள். (2பேதுரு 2:14-15).
14. அகந்தையான வீண்வார்த்தைகளைப் பேசுகிறார்கள். (2பேதுரு 2:18).
15. மாம்ச இச்சைகளினாலும், காம விகாரங்களினாலும் ஜனங்களைத் தந்திரமாய்ப் பிரிக்கிறார்கள். (2பேதுரு 2:18).

II பேதுரு - தொகுப்புரை

2 அதிகாரம்

16. தாங்களே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும், அவர்களுக்குச் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணுகிறார்கள். (2பேதுரு 2:19).

மேலே கூறப்பட்டிருக்கும் சுபாவங்களை உடைய அக்கிரமக்காரரைத் தேவன் நியாயத் தீர்ப்பு நாளில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க வேண்டுமென்று தீர்மானம் பண்ணியிருக்கிறார். (2பேதுரு 2:9).

"அசுத்த இச்சை" **(lust of uncleanness)** - ஓரினச்சேர்க்கை என்னும் ஆண்புணர்ச்சியை **(homosexual)** இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (ரோமர் 1:24).

"அவர்களைத் தூஷணமாய்க் குற்றப்படுத்த மாட்டார்களே" - தேவதூதர்கள் அதிக பெலனையும், வல்லமையையும் உடையவர்கள். துன்மார்க்கருடைய செயல்களைக் குறித்தும், பாவம் செய்த தூதர்களைக் குறித்தும், இந்தப் பரிசுத்தத் தூதர்கள் தேவனிடத்தில் கணக்கொப்புவிக்க வேண்டும். ஆனால் இந்தத் தூதர்கள் துன்மார்க்கரை அவசரப்பட்டு, தூஷணமாய்க் குற்றப்படுத்தமாட்டார்கள். அதற்குப் பதிலாகக் கிருபையுடன் தங்களுடைய அறிக்கையைத் தேவனிடம் சமர்ப்பிப்பார்கள். (சக 3:1; யூதா 1:9).

(2) வஞ்சனையில் உல்லாசமாய் வாழ்கிறவர்கள்

2பேதுரு 2:12 இவர்களோ பிடிபட்டழிக்கப் படுவதற்கு உண்டான புத்தியற்ற மிருகஜீவன்களைப்போலத் தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூஷித்து, தங்கள் கேட்டிலே கெட்டழிந்து, அநீதத்தின் பலனை அடைவார்கள்.

2பேதுரு 2:13 இவர்கள் ஒருநாள் வாழ்வை இன்பமென்றெண்ணி, கறைகளும் இலச்சைகளுமாயிருந்து; உங்களோடே விருந்துண்கையில் தங்கள் வஞ்சனைகளில் உல்லாசமாய் வாழ்கிறவர்கள்;

"உங்களோடே விருந்துண்கையில்" - விசுவாசிகள் மத்தியில் துன்மார்க்கர்கள் தேவபக்தியுள்ளவர்களைப் போல நடித்து, அவர்களோடே விருந்துகளில் கலந்து கொள்வார்கள்.

(3) பொருளாசையுடையவர்கள் - இரக்கமற்றவர்கள்

2பேதுரு 2:14 விபசார மயக்கத்தால் நிறைந்தவைகளும், பாவத்தை விட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களையுடையவர்கள்; உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடித்து, பொருளாசைகளில் பழகின இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகள்.

"விபசாரமயக்கத்தால் நிறைந்தவைகளும், பாவத்தைவிட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களையுடையவர்கள்" - பாவமான செயல்கள் அவர்களுடைய கண்களுக்கு முன்பாக எப்பொழுதும் நிழல்போல் தெரிந்து கொண்டேயிருக்கும். தங்களுடைய கற்பனைகளைப் பாவமான செயல்களாக மாற்றுவதற்கு இப்பேர்ப்பட்டவர்கள் வஞ்சனையோடு வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

"உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடித்து" - உறுதியில்லாத சுபடமற்ற புருஷர்களையும், ஸ்திரீகளையும் துன்மார்க்கர்கள் தந்திரமாகப் பிடித்து, தங்களுடைய காமவிகாரத்திற்குப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

(4) இவர்களுக்காக வைக்கப் பட்டிருக்கும் காரியம்

2பேதுரு 2:15 செம்மையான வழியைவிட்டுத் தப்பி நடந்து, பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றிப்போனவர்கள்; அவன் அநீதத்தின் கூலியை விரும்பி,

II பேதுரு - தொகுப்புரை

2 அதிகாரம்

2பேதுரு 2:16 தன்னுடைய அக்கிரமத்தினிமித்தம் கடிந்துகொள்ளப்பட்டான்; பேசாத மிருகம் மனுஷர்பேச்சைப் பேசித் தீர்க்கதரிசியினுடைய மதிகேட்டைத் தடுத்தது.

2பேதுரு 2:17 இவர்கள் தண்ணீரில்லாத கிணறுகளும், சுழல்காற்றினால் அடியுண்டோடுகிற மேகங்களு மாயிருக்கிறார்கள்; என்றென்றைக்கு முள்ள காரிருளே இவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

விட்டுவிடுதல் **(forsaken)** - καταλείπω - **kataleipoo** - 2641

வினைச்சொல் - விடு, போ, மீதியாக வை

பிலேயாமின் மூன்று பாவங்கள் (எண் 22:1-24:25)

1. பிலேயாமின் வழி (2பேதுரு 2:15) - அநீதத்தின் கூலியை விரும்பினான். (2பேதுரு 2:15; எண் 22:7,17,37; எண் 24:11).
2. பிலேயாமின் வஞ்சம் (யூதா 1:11) - அநீதத்தின் கூலியைப் பெற்றுக் கொண்டான். (யூதா 1:11; 2பேதுரு 2:15; எண் 31:8, 16).
3. பிலேயாமுடைய போதகம். (வெளி 2:14) - பாலாக் என்பவனுக்குப் பிலேயாம் செய்த தவறாகப் போதகம் பண்ணினான். (எண் 25:1-9; எண் 21:8, 16).

"பேசாத மிருகம் மனுஷர்பேச்சைப் பேசித் தீர்க்கதரிசியினுடைய மதிகேட்டைத் தடுத்தது" - (எண் 22:22-35)

கள்ளத்தீர்க்கதரிசிகளின் அடையாளங்கள்

1. தண்ணீரில்லாத கிணறுகள்
2. சுழல்காற்றினால் அடியுண்டோடுகிற மேகங்கள்.

பாலைவனத்தில் தண்ணீரில்லாத கிணறுகளாலும், மழை பெய்யாத வறண்ட மேகங்களாலும், எவ்விதப் பயனும் இல்லை. அதுபோலவே கள்ளத்தீர்க்கதரிசிகளாலே சபையாருக்கு எவ்விதப் பயனும் இல்லை. (மத் 7:15)

(5) மனுஷரின் தந்திரம்

2பேதுரு 2:18 வஞ்சகமாய் நடக்கிறவர்களிடத்திலிருந்து அரிதாய்த் தப்பினவர்களிடத்தில் இவர்கள் அகந்தையான வீண்வார்த்தைகளைப் பேசி, மாம்ச இச்சைகளினாலும் காமவிகாரங்களினாலும் அவர்களைத் தந்திரமாய்ப் பிடிக்கிறார்கள்.

"இவர்கள் அகந்தையான வீண் வார்த்தைகளைப் பேசி, மாம்ச இச்சைகளினாலும் காமவிகாரங்களினாலும் அவர்களைத் தந்திரமாய்ப் பிடிக்கிறார்கள்" - கள்ளப்போதகர்களால் ஜீவத்தண்ணீரைக் கொடுக்க முடியாது. இவர்களால் ஆத்துமாக்களுக்கு ஜீவனைக் கொடுக்க முடியாது. அவற்றைக் கெடுக்கத்தான் முடியும். அகந்தையான வீண் வார்த்தைகளாலும், மாம்ச இச்சைகளினாலும், காமவிகாரங்களினாலும், கள்ளத் தீர்க்கதரிசிகள் ஜனங்களுடைய ஆத்துமாக்களைக் கெடுக்கப் போடுகிறார்கள்.

காமவிகாரம் **(wantonness)** - ἀσέλγεια - **aselgeia** - 766

பெண்பால் பெயர்ச்சொல் - காமவிகாரம் **(licentiousness, lustfulness)**

"மாம்ச இச்சைகளினாலும் காமவிகாரங்களினாலும்" - ஓரினச்சேர்க்கை. (ரோமர் 1:27)

II பேதுரு - தொகுப்புரை

2 அதிகாரம்

(6) நிலையில்லாத ஆத்துமாக்களை தந்திரமாய் பிடிக்கிறார்கள்

2பேதுரு 2:19 தாங்களே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும், அவர்களுக்குச் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணுகிறார்கள்; எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே.

"தாங்களே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும், அவர்களுக்குச் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணுகிறார்கள்" - கள்ளப்போதகர்கள் கேட்டுக்கு அடிமைகளாக இருக்கிறார்கள். ஆயினும் இவர்கள் மற்றவர்களுக்கு விடுதலையை அறிவிக்கிறார்கள்.

(7) கள்ளப் போதகர்களுக்கு இரட்சிப்பின் நம்பிக்கையில்லை

2பேதுரு 2:20 கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக் கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும்.

2பேதுரு 2:21 அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்.

2பேதுரு 2:22 நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது.

"அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும்" - என்னும் வாக்கியம் பின்மாறிப்போனவர்களைக் குறிக்கும்.

அசுத்தம் (pollutions) - **μίασμα** - **miasma** - 3393

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - அசுத்தம் **(things that infect, pollute, and defile)** (2பேதுரு 2:20; 2பேதுரு 1:4).

சிக்கிக்கொள் (entangled) - **ἐμπλέκω** - **emplekoo** - 1707

வினைச்சொல் - சிக்கிக்கொள் **(to plait, weave in; interweave; entangle)** (2தீமோ 2:4)

ஜெயிக்கப்படுதல் (overcome) - **ἡττάω** -**heettaoo** - 2274

வினைச்சொல் - குறைவாயிரு, பாடுபடு **(to make worse; vanquish) "overcome"** (2பேதுரு 2:19-20) **" inferior"** (2கொரி 12:13).

"நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது" - நீதி 26:11 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

II பேதுரு - தொகுப்புரை

3 அதிகாரம்

V. கர்த்தருடைய நாள்

1. நிருபத்தின் நோக்கம்

2பேதுரு 3:1 பிரியமானவர்களே, இந்த இரண்டாம் நிருபத்தை இப்பொழுது உங்களுக்கு எழுதுகிறேன்.

2பேதுரு 3:2 பரிசுத்த தீர்க்கதரிசிகளால் முன் சொல்லப்பட்ட வார்த்தைகளையும், இரட்சகராயிருக்கிற கர்த்தருடைய அப்போஸ்தலராகிய எங்களுடைய கட்டளைகளையும் நீங்கள் நினைவு கூரும் படி இந்த நிருபங்களினால் உங்கள் உண்மையான மனதை நினைப்பூட்டி எழுப்புகிறேன்.

"பரிசுத்த தீர்க்கதரிசிகள்" - அப்போஸ்தலருடைய நிருபங்களைப் பரிசுத்த தீர்க்கதரிசிகளுடைய நிருபங்களுக்கு இணையாக பேதுரு ஒப்பிட்டுக் கூறுகிறார்.

2. கிறிஸ்துவின் வருகையை மறுதலிக்கும் பரியாசக்காரர்

2பேதுரு 3:3 முதலாவது நீங்கள் அறியவேண்டியது என்னவெனில்: கடைசிநாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து,

2பேதுரு 3:4 அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின்தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள்.

தீர்க்கதரிசன எண் - 5

"கடைசிநாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து, அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே?" என்று சொல்லுவார்கள். (2பேதுரு 3:3-4) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

"அவர் வருவார்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கும் வாக்கியம். (2தெச 1:7-8)

3. பரியாசக்காரர் பூர்வகாலத்தை அறியாதிருக்கிறார்கள்

2பேதுரு 3:5 பூர்வகாலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும், தோன்றி ஜலத்தினாலே நிலை கொண்டிருக்கிற பூமியும் உண்டாயின வென்பதையும்,

2பேதுரு 3:6 அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்த தென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள்.

2பேதுரு 3:7 இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந் தீர்க்கப்பட்டு அழிந்து போகும் நாள்வரைக்கு காக்கப்பட்டிருக்கிறது.

"பூர்வகாலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும்" - ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் தமது வார்த்தையினாலே சிருஷ்டித்த நிகழ்ச்சியை பேதுரு இங்கு குறிப்பிடுகிறார். (எபி 1:10).

"ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமியும்" - ஆதி 1:2 ஆவது வசனத்தில் பூமி சிருஷ்டிக்கப்படவில்லை என்பது ஒருசிலருடைய கருத்து. ஜலப்பிரளயமாக இருந்தது பின்பு வெட்டாந்தரையான பூமியாயிற்று என்று இவர்கள் கருத்து கூறுகிறார்கள். ஆதி 1:9-10 ஆகிய வசனங்களை இவர்கள் தங்களுடைய விவாதத்திற்கு ஆதாரமாகக் கூறுகிறார்கள்.

II பேதுரு - தொகுப்புரை

3 அதிகாரம்

அறியாமலிருப்பது (ignorant) - λανθάνω - lanthanoo - 2990

வினைச்சொல் - மறைவாயிரு, மறைந்திரு, அறியாமல் **(to be unseen, unnoticed) " ignorant of"** (2பேதுரு 3:5,8); **"unawares"** (எபி 13:2); **"be hid"** (மாற்கு 7:24; லூக்கா 8:47; அப் 26:26)

ஜனங்கள் மனதார அறியாமலிருக்கும் காரியங்கள்

1. பூர்வத்திலே தேவனுடைய வார்த்தையினாலே வானங்கள் உண்டாயிற்று என்பது(2பேதுரு 3:5; சங் 68:33; சங் 93:2; சங் 102:25; மீகா 5:2).

2. ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமியும் உண்டாயிற்று என்பது. (2பேதுரு 3:5; சங் 24:2; சங் 136:6).

3. "அப்பொழுது இருந்த உலகம்" என்பது ஆதாமிற்கு முந்தி இருந்த உலகத்தைக் குறிக்கும். இந்த உலகம் ஆதாமின் காலத்திற்கு முன்பாக ஜலப் பிரளயத்தினால் அழிக்கப்பட்டது என்பது. (2பேதுரு 3:6; ஆதி 1:2; சங் 104:5-9; எரே 4:23-26; ஏசா 14:12-14; எசே 28:11-17)

4. இப்பொழுதிருக்கிற வானங்களும், பூமியும் நியாயத்தீர்ப்பிலிருந்து மீட்கப்பட்டது. (2பேதுரு 3:7; ஆதி 1:3-2:25).

5. வானங்களும், பூமியும் ஆதாமின் மூலமாக நியாயந்தீர்க்கப்பட்டு, அழிந்து போவதற்காகக் காக்கப் பட்டிருக்கிறது. (2பேதுரு 3:7,10-12; ரோமர் 8:18-25; எபி 1:10-12; எபி 12:25-28; வெளி 20:7-15).

6. கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம்வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறது. (2பேதுரு 3:8-9; ஏசா 57:15; எபே 3:11).

7. கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாய் இருக்கமாட்டார். (2பேதுரு 3:9; 1தீமோ 2:4; வெளி 22:17).

8. கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும். (2பேதுரு 3:10-13; ஏசா 65:17; ஏசா 66:22-24; வெளி 21-22).

9. பூமியும், அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்து போகும். (2பேதுரு 3:10; 1கொரி 15:24-28).

10. தேவனுடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாய் இருக்கும் புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகும். (2பேதுரு 3:13; ஆதி 1:26-31; ஆதி 8:22; ஆதி 9:12; ஏசா 9:6-7; ஏசா 59:20; தானி 2:44-45; தானி 7:13-14,27; மத் 25:34,46; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 21:1-22:5).

11. தேவன் தமது பரிசுத்த நகரத்தைப் பரலோகத்திலிருந்து பூமிக்கு மாற்றி அமைப்பார். (2பேதுரு 3:13; வெளி 21:1-22-5).

12. உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் தேவனுடைய சந்ததியாராயும், கிறிஸ்துவின் உடன் சுதந்தரராயும் இருப்பார்கள். (2பேதுரு 3:13; சங் 149:5-9; தானி 7:18-27; மத் 19:28; ரோமர் 8:17; 1கொரி 4:8; 1கொரி 6:2; எபே 2:7; 2தீமோ 2:12; 2தெச 1:4-10; வெளி 1:6; வெளி 2:26-27; வெளி 5:9-10; வெளி 11:15; வெளி 12:5; வெளி 20:4-6; வெளி 22:5).

II பேதுரு - தொகுப்புரை

3 அதிகாரம்

வேதத்தில் கூறப்பட்டிருக்கும் சத்தியங்கள் மனுஷருக்குத் தெளிவாக வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. ஆயினும் ஒருசிலர் வேதத்தைக் குறித்து அறியாமையில் இருக்க வேண்டுமென்று தாங்களாகவே தீர்மானம் பண்ணிக் கொள்கிறார்கள். சத்தியத்திற்குத் தங்களுடைய கண்களையும், செவிகளையும் மூடிக் கொள்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து நிச்சயமற்றவர்களாக இருக்கிறார்கள். (2பேதுரு 2:1-2; 2பேதுரு 3:5,8).

உலகம் (world) - κόσμος - kosmos - 2889

ஆண்பால் பெயர்ச்சொல் - உலகம், அலங்கரிப்பு, லௌகிகம் **(social system)** - அப்பொழுது இருந்த உலகம் என்பது ஆதாமின் காலத்திற்கு முந்தைய உலகத்தைக் குறிக்கும். இது வெள்ளத்தில் அழிந்துபோயிற்று. (ஆதி 1:2; சங் 104:5-9) இந்த வெள்ளத்தில் ஒன்றும் பிழைக்கவில்லை. (எரே 4:23-26) இக்காலத்தில்தான் லூசிபர் தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணினான். (ஏசா 14:12-14; எசே 28:11-17; மத் 13:35)

வானங்கள், பூமி ஆகியவற்றின் வெவ்வேறு காலங்கள்

1. அப்பொழுது இருந்த உலகம். (2பேதுரு 3:6; ஆதி 1:1-2)
2. இப்பொழுது இருக்கிற வானங்களும், பூமியும். (2பேதுரு 3:7; ஆதி 1:3-2:25)
3. புதிய வானங்களும், புதிய பூமியும் (2பேதுரு 3:13; ஏசா 65:17; ஏசா 66:22-24; வெளி 21-22)

ஆதாமிற்கு முன்பிருந்த உலகம்

1. பேதுரு இரண்டு விதமான உலகங்களைப் பற்றி இங்கு குறிப்பிடுகிறார். ஒன்று அப்பொழுது இருந்த உலகம். மற்றொன்று இப்பொழுது இருக்கிற வானங்களும், பூமியும். (2பேதுரு 3:6-7).
2. அப்பொழுது இருந்த உலகம் ஜலத்தினால் அழிந்துபோயிற்று. இப்பொழுது இருக்கும் உலகம் அக்கினியினால் அழிந்துபோகும். (2பேதுரு 3:6-7).
3. அப்பொழுது இருந்த உலகம் "ஆதியிலே" சிருஷ்டிக்கப்பட்டது. ஆதி 1:1-2 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஜலப்பிரளயம் அந்த உலகத்தை அழித்துப் போட்டது. இந்த ஜலப்பிரளயத்திற்கு ஆறு நாட்களுக்குப் பின்பு இப்பொழுது இருக்கிற உலகம் சிருஷ்டிக்கப்பட்டது. (ஆதி 1:3-2:25).
4. நோவாவின் காலத்தில் உண்டான ஜலப்பிரளயம் ஆதாமின் காலத்திலிருந்து நோவாவின் காலம் வரையிலுமுள்ள எல்லா ஜீவராசிகளையும் அழித்துப் போடவில்லை. ஜலப்பிரளயத்திற்குப் பின்பு தங்களுடைய இனத்தைப் பலுகிப் பெருக்குவதற்காக நோவாவின் பேழையின் மூலமாக ஒருசில ஜீவராசிகள் தப்பிப் பிழைத்தார்கள். ஆனால் அப்பொழுது இருந்த உலகத்தில் உண்டான ஜலப்பிரளயத்தில் எந்த மனுஷரும், பறவைகளும், விலங்குகளும் ஜீவனோடு தப்பிக்கவில்லை. (2பேதுரு 3:6; ஆதி 1:2; எரே 4:23-26).
5. ஆதாமின் நாளில் வானங்களிலும், பூமியிலும் மாற்றம் உண்டானதைப் போன்று நோவாவின் நாளில் எந்த மாற்றமும் உண்டாகவில்லை. ஆகையினால் அப்பொழுது இருந்த உலகம் என்பது ஆதாமின் காலத்திற்கு முற்பட்ட உலகத்தைக் குறிக்கும். (ஆதி 1:3-2:25). இப்பொழுது இருக்கிற உலகம் என்பது நோவாவின் காலத்தில் உண்டாக்கப்பட்டதல்ல. இது ஆதாமின் காலத்தில் உண்டாக்கப்பட்டது.

II பேதுரு - தொகுப்புரை

3 அதிகாரம்

6. 2பேதுரு 3:6; ஆதி 1:2 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஜலப் பிரளயத்திற்குப் பின்பு எந்த ஜீவராசியும் தப்பி பிழைக்கவில்லை. ஆறு நாட்களில் அவை மறுபடியும் சிருஷ்டிக்கப்பட்டன. (ஆதி 2:4-9) ஆதாமின் காலத்திற்கு முன்பாக ஜீவராசிகள் இருந்தது என்பது எரே 4:23-26 ஆகிய வசனங்களிலிருந்து தெளிவாகிறது.

7. பூமியில் மூன்று வெவ்வேறு காலங்கள் இருந்தன, இருக்கும். அவையாவன:

(1) ஆதாமின் காலத்திற்கு முந்திய உலகம் - இது அப்பொழுது இருந்த உலகம் எனப்படுகிறது. இந்த உலகம் இப்பொழுது இருக்கும் வானங்களுக்கும், பூமிக்கும் முந்தியது. (2பேதுரு 3:6)

(2) ஆதாமின் காலத்து பாவமான உலகம் - ஆதாமின் காலத்திலிருந்து புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகும் காலம் வரையிலும் உள்ளது. (2பேதுரு 3:7)

(3) ஆதாமின் பாவமில்லாத உலகம் - இது புதிய பூமியில் இருக்கும். (2பேதுரு 3:13; வெளி 21:1-22:5; ஏசா 66:22-24)

8. இரண்டு உலகங்களின் வெவ்வேறு முடிவுகளைப் பேதுரு தெளிவாகக் கூறுகிறார். அவையாவன:

(1) அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தில் அழிந்தது. 2பேதுரு 3:6; ஆதி 1:2; எரே 4:23-26; ஏசா 14:12-14; எசே 28:11-17; மத் 13:35.

(2) இப்பொழுது இருக்கிற உலகம் அக்கினியினால் அழியும். ஆயிரம் வருஷ அரசாட்சியின் போது இதன் முடிவு உண்டாகும். (2பேதுரு 3:7,10-13; 1கொரி 15:24-28; வெளி 20:7-10).

9. பேதுரு நோவாவின் காலத்து ஜலப்பிரளயத்தைப் பற்றி குறிப்பிடும்போது நோவாவையும், தப்பித்த எட்டுப்பேரையும் குறிப்பிடுவது வழக்கம். (1பேதுரு 3:20; 2பேதுரு 2:5). மற்றவர்களும் நோவாவின் காலத்து ஜலப்பிரளயத்தை இவ்வாறு வேறுபடுத்திக் கூறினார்கள். (ஏசா 54:9; மத் 24:37-38; லூக்கா 17:26-27; எபி 11:7). ஆகையினால் 2பேதுரு 3:6 ஆவது வசனம் நோவாவின் காலத்து ஜலப்பிரளயத்தைக் குறிப்பிடாமல் ஆதாமிற்கு முந்திய காலத்தில் ஏற்பட்ட ஜலப்பிரளயத்தையே குறிக்கிறது.

10. ஆதாமின் காலத்திற்கு முன்பு ஒரு ஜலப்பிரளயம் உண்டாயிற்று என்பது தெளிவான காரியம். (2பேதுரு 3:6; ஆதி 1:2; சங் 104:5-9) தேவன் தேவையில்லாமல் ஜலப்பிரளயத்தின் மூலமாக நியாயத்தீர்ப்பை அனுப்பமாட்டார். ஆதாமின் காலத்திற்கு முன்பு இருந்த உலகத்திற்குத் தேவனுடைய நியாயத்தீர்ப்பு தேவையாயிருந்த படியினால் தேவன் அக்காலத்தில் மிகப்பெரிய ஜலப்பிரளயம் ஒன்றை அனுப்பி ஜீவராசிகள் அனைத்தையும் அழித்துப்போட்டார். (2பேதுரு 3:6; ஆதி 1:2; சங் 104:5-9).

"இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே...... காக்கப் பட்டிருக்கிறது" - ஆதாமின் நாளிலிருந்து இப்பொழுது இருக்கிற வானங்களும், பூமியும் தேவனுடைய வார்த்தையினாலே சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறது. (ஆதி 1:3-2:25; யாத் 20:11).

II பேதுரு - தொகுப்புரை

3 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 6

"இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப் பட்டிருக்கிறது" (2பேதுரு 3:7) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. 2பேதுரு 3:10-13 ஆகிய வசனங்களின் பிரகாரம் வானங்களும், பூமியும் அக்கினியினால் புதுப்பிக்கப்படும் காலம் ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவிலும் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பின் போதும் நடைபெறும். (2பேதுரு 3:7; வெளி 20:11-15).

4. கர்த்தருக்கு ஒரு நாளும் ஆயிரம் வருஷமும்

2பேதுரு 3:8 பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம்வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள்போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்கவேண்டாம்.

2பேதுரு 3:9 தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம் மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.

"கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம் மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" - கர்த்தருடைய வருகை தாமதமாவதற்குத் தெளிவான காரணம் இங்கு கூறப்பட்டிருக்கிறது.

5. அக்கினியினால் புதுப்பிக்கப்படுதல்

2பேதுரு 3:10 கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.

2பேதுரு 3:11 இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!

2பேதுரு 3:12 தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்; அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம்.

2பேதுரு 3:13 அவருடைய வாக்குத்தத்தத்தின் படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்.

தீர்க்கதரிசன எண் - 7

"கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்......" 2பேதுரு 3:10-13) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேற வில்லை.

இரவிலே திருடன் வருகிறவிதமாய்" - (1தெச 5:2)

"அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம்" - கர்த்தருடைய நாளின் முடிவில் இது நடைபெறும். (2பேதுரு 3:7; வெளி 20:7-15).

அகன்றுபோதல் (pass away) - παρέρχομαι - parerchomai - 3928

வினைச்சொல் - கடந்துப்போ, ஒழிந்துப்போ, நீங்கு, நீங்கிப்போ, விட்டுவிடு, அகன்றுபோ (pass away; pass from condition to another)

3 அதிகாரம்

அகன்றுபோகும் காரியங்களும், அகன்று போகாத காரியங்களும்

1. காலங்கள் அகன்றுபோகும். (மத் 14:15; 1பேதுரு 4:3)
2. உபவாசநாள் கழிந்துபோகும். (அப் 27:9)
3. தேவனுடைய வார்த்தை அழிந்து போகாது. (மத் 5:18; மத் 24:34-35; மாற்கு 13:30-31; லூக்கா 16:17; லூக்கா 21:32-33)
4. ஜனங்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரிடத்திற்குக் கடந்து போவார்கள். (மத் 8:28; மாற்கு 6:48; லூக்கா 18:37; அப் 16:8)
5. பரிசேயர்கள் தேவனுடைய அன்பையும், நியாயத்தையும் விட்டுவிடுவார்கள். (லூக்கா 11:42)
6. எஜமானுடைய போகையும், வருகையும் (லூக்கா 12:37; லூக்கா 17:7; அப் 24:7)
7. தகப்பனுடைய கற்பனையை மீறாதிருப்பது. (லூக்கா 15:29)
8. ஆபத்து கடந்து போதல். (மத் 26:39,42; மாற்கு 14:35)
9. பாவங்கள் ஒழிந்துபோதல். (2கொரி 5:17)
10. மனுஷனுடைய ஜீவன் புல்லின் பூவைப் போல ஒழிந்துபோதல். (யாக் 1:10)
11. வானங்களும், பூமியும் அழிந்துபோதல். (2பேதுரு 3:10; வெளி 21:1)

பூமியும், அதிலுள்ள கிரியைகளும் அழிந்துபோகும் விதம்

1. அக்கினிக்கு இரையாக வைக்கப்படும். (2பேதுரு 3:7,10-12)
2. சிருஷ்டியானது அழிவிற்குரிய அடிமைத்தனத் தினின்று விடுதலையாக்கப்படும். தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக் கொள்ளும். (ரோமர் 8:20)
3. பூமி மாறிப்போகும். (எபி 1:10-12)
4. தேவன் பூமியை அசையப்பண்ணுவார். பூமி மாறிப்போகும். (எபி 12:25-28; ஏசா 65:17; ஏசா 66:22-24; 1பேதுரு 3:13; வெளி 21:1)
5. பூமியில் இனி ஒரு சாபமும் இராது. (வெளி 22:3)

மடமட என்னும் சப்தம் **(great noise)** - **ῥοιζηδόν** - **rhoizeedon** - 4500

வினையடை - மடமட என்று **(a rushing sound; swish)** - பூமி விரைவாக மாற்றப்படும்.

பூதங்கள் **(elements)** - **στοιχεῖον** - **stoicheion** - 4747

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - அடிப்படை சத்தியம், உபதேசம் **"element"** (2பேதுரு 3:10,12; கலா 4:3,9); **"rudiment"** (கொலோ 2:8,20); **"principle"** (எபி 5:12).

உருகுதல் **(melt)** - **λύω** - **lyoo** - 3089

வினைச்சொல் - மீறு, கட்டவிழ், அவிழ், விடுதலையாகு, களை, தள்ளு, உடை, தகர் **(to loose) "melt"** (2பேதுரு 3:10); **"dissolve"** (2பேதுரு 3:11-12); **"destroy"** (யோவான் 2:19; 1யோவான் 3:8); **"break up"** (அப் 13:43); **"break"** (மத் 5:19; யோவான் 5:18; யோவான் 7:23; யோவான் 10:35; அப் 27:41; எபே 2:14); **"put off"** (அப் 7:33); **"unloose"** (மாற்கு 1:7; லூக்கா 3:16; யோவான் 1:27); **"be loosing"** (லூக்கா 19:33); **"to loose"** (மத் 16:19; மத் 18:18; மத் 21:2; மாற்கு 7:35; மாற்கு 11:2-5; லூக்கா 13:15-16;

II பேதுரு - தொகுப்புரை

3 அதிகாரம்

லூக்கா 19:30-33; யோவான் 11:44; அப் 2:24; அப் 13:25; அப் 22:30; அப் 24:26; 1கொரி 7:27; வெளி 5:2,5; வெளி 9:14-15; வெளி 20:3,7)

வெந்து உருகு **(fervent heat)** - **καυσόω** - **kausooo** - 2741

வினைச்சொல் - வெந்து உருகு, வெந்து அளி **(burning heat)** (2பேதுரு 3:10,12).

பூமி **(earth)** - **γῆ** - **gee** - 1093

பெண்பால் பெயர்ச்சொல் - தேசம், நாடு, பூமி, நிலம், தரை, பூலோகம், கரை, மண் **(the ground)** (2பேதுரு 3:10).

கிரியைகள் **(works)** - **ἔργον** - **ergon** - 2041

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல் - கிரியை, வேலை, ஊழியம், வேலைப்பாடு **(works, toil, deeds, labor, acts of man)** - ஆவிக்குரிய கிரியைகளையும், உலகப்பிரகாரமான கிரியைகளையும் இந்த வார்த்தை குறிப்பிடுகிறது.

எரிந்து அழிந்து போதல் **(burned up)** - **κατακαίω** - **katakaioo** - 2618

வினைச்சொல் - சுட்டெரி, வெந்துபோ, எரிந்துபோ **to burn down to the ground; wholly consume with fire** - பூமியிலுள்ள காரியங்களும், மனுஷருடைய காரியங்களும் அக்கினியினால் பட்சிக்கப்படும். இதன் மூலமாகத் தேவையற்ற காரியங்கள் அகற்றப்பட்டு, தேவையான காரியங்கள் நித்திய காலத்திற்கும் நிலைத்து நிற்கும். (எபி 12:25-28).

"இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால்" - பூமியிலுள்ள காரியங்களும், மனுஷருடைய காரியங்களும் அழிந்துபோகக்கூடியவை.

"தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்" - அந்த நாளுக்கு முன்பாகப் பூமியில் பாவங்களும், கலகங்களும் அடக்கப்படும். கர்த்தர் புதிய பூமியிலே எல்லாவற்றுக்கும் எல்லாமாக இருப்பார். (1கொரி 15:24-28; வெளி 21:1-22:5).

"தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு" - இயேசு கிறிஸ்துவினுடைய வருகையை மனுஷரால் தாமதப்படுத்தவோ, விரைவு படுத்தவோ முடியாது. கர்த்தருடைய காரியங்கள் அவருடைய சித்தத்திற்கு ஏற்ற பிரகாரம் ஏற்ற வேளையில் நடைபெறும். (அப் 1:7).

"தேவனுடைய நாள்" **(day of God)** - லூசிபர், ஆதாம் ஆகியோர் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் கலகம்பண்ணினார்கள். இதனால் பூமியில் சாபம் உண்டாயிற்று. இவர்களுடைய கலகத்திற்கு முன்பாக பூமி ஒரு சாபமும் இல்லாமல் பரிபூரணமாய் இருந்தது. தேவனுடைய நாளில் ஒருவரும் தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ண மாட்டார்கள். (1கொரி 15:24-28; எபே 1:10; வெளி 21:1-22:5; ஏசா 65:17; ஏசா 66:22-24; 2பேதுரு 3:13).

"அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம்" - இது கர்த்தருடைய நாளின் **(the day of the Lord)** முடிவும், தேவனுடைய நாளின் **(the day of God)** துவக்கமுமாகும். (2பேதுரு 3:7,10-13; 1கொரி 15:24-28; வெளி 20:7-15).

"வாக்குத்தத்தத்தம்" - (ஏசா 65:17; ஏசா 66:22-24)

"புதிய வானங்களும் புதிய பூமியும்" - பூமி மூன்று தடவை புதிதாக்கப்பட்டது. அவையாவன:

1. முதலாவது சிருஷ்டிப்பில் (ஆதி 1:1)
2. ஆறு நாட்களில் நடைபெற்ற மறுசிருஷ்டிப்பில் (ஆதி 1:3-2:25; யாத் 20:11; யாத் 31:15)

3 அதிகாரம்

3. வானங்களும், பூமியும் அக்கினியினால் புதிதாக்கப்படும் போது (2பேதுரு 3:7,12-13; ஏசா 65:17; ஏசா 66:22-24; வெளி 21:1-22:5)

"நீதி வாசமாயிருக்கும்" - மனுஷர் ஜீவிப்பதற்காகவே பூமி சிருஷ்டிக்கப்பட்டது. (ஏசா 45:18) தேவனுடைய இந்த நோக்கம் ஆயிரம் வருஷ அரசாட்சியின் இறுதியில் நிறைவேறும். (வெளி 20:7-10) அப்போது சாத்தானும், அவனுடைய தூதர்களும் ஒடுக்கப்பட்டு, நரகத்திலே தள்ளப்படுவார்கள். அக்கினியினால் பூமி புதுப்பிக்கப்பட்டிருக்கும். இந்தப் பரிபூரண பூமியில் நீதி வாசமாயிருக்கும். (ஆதி 1:26-31; ஆதி 8:22; ஆதி 9:12; ஏசா 9:6-7; ஏசா 59:20; தானி 2:44-45; தானி 7:13-27; லூக்கா 1:31-33; வெளி 11:15; வெளி 22:5).

6. கர்த்தருடைய நாளின் நிமித்தமாக ஆலோசனைகள்

2பேதுரு 3:14 ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழை இல்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும் படி ஜாக்கிரதையாயிருங்கள்.

விசுவாசிகளுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. நீங்கள் கறையற்றவர்களும் பிழை இல்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும் படி ஜாக்கிரதையாயிருங்கள் (2பேதுரு 3:14)
2. அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்து போகாத படிக்கு எச்சரிக்கையாயிருங்கள். (2பேதுரு 2:1-22)
3. நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள் (2பேதுரு 3:18)

7. சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது

2பேதுரு 3:15 மேலும் நம்முடைய கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள்; நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்;

2பேதுரு 3:16 எல்லா நிருபங்களிலும் இவைகளைக் குறித்துப் பேசியிருக்கிறான்; அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாதவர்களும் உறுதி இல்லாதவர்களும் மற்ற வேத வாக்கியங்களைப் புரட்டுகிறது போலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்.

"உங்களுக்கு எழுதியிருக்கிறான்" - பவுலின் எந்த நிருபத்தை பேதுரு இங்கு குறிப்பிடுகிறார் என்பது தெரியவில்லை. ஒருவேளை பவுல் எபிரெயருக்கு எழுதின நிருபத்தைப் பற்றி பேதுரு இங்குக் குறிப்பிட்டிருக்கலாம்.

"அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது" - பவுல் சொன்ன எந்தக் காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது என்று பேதுரு இங்கு குறிப்பிடவில்லை. பவுலின் உபதேசங்கள் புறஜாதியாருக்கு விசேஷமாக எழுதப்பட்டவை. பேதுருவின் நிருபம் யூதருக்கு விசேஷமாக எழுதப்பட்டது. மோசேயின் நியாயப் பிரமாணத்தைக் குறித்த உபதேசம் யூதருக்கும், புறஜாதியாருக்கும் அவர்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் கூறப்பட வேண்டும். இல்லையெனில், இதை அறிந்து கொள்வதற்கு அரிதாயிருக்கும்.

II பேதுரு - தொகுப்புரை

3 அதிகாரம்

"கல்லாதவர்களும் உறுதி இல்லாதவர்களும் மற்ற வேத வாக்கியங்களைப் புரட்டுகிறது போலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்" - பரிசுத்த வேதாகமத்திலுள்ள சத்தியங்கள் மிகவும் எளிமையானவை. யாரும் வாசித்து எளிதில் புரிந்து கொள்ளலாம். அது அறிகிறதற்கு அரிதானதல்ல. கல்லாதவர்களும், உறுதியில்லாதவர்களும் வேண்டுமென்றே சத்தியத்தைப் புரட்டுகிறார்கள். இதனால் தங்களுக்கும், மற்றவர்களுக்கும் கேடு வருவிக்கிறார்கள். (மத் 13:15-17; 1கொரி 2:14).

8. பின்வாங்கிப்போவதற்கு எதிராக இரண்டு கட்டளைகள்

2பேதுரு 3:17 ஆதலால் பிரியமானவர்களே, இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிற படியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்து போகாத படிக்கு எச்சரிக்கையாயிருந்து,

2பேதுரு 3:18 நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்.

"ஆதலால்" - விசுவாசிகளும், தங்களுடைய உறுதியிலிருந்து விலகி விழுந்துபோவதற்கு வாய்ப்புள்ளது. ஆதலால்.... (2பேதுரு 3:17, கலா 1:6-9; கலா 5:4; எபி 12:15)

"நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்துபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" - விசுவாசிகள் விழுந்துபோவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் மிகுந்த எச்சரிக்கையோடு இருந்து தங்களுடைய உறுதியிலிருந்து விலகிப்போகாமல் ஜீவிக்கவேண்டும்.

"அக்கிரமக்காரருடைய வஞ்சகம்" - வேதவாக்கியத்தைப் புரட்டுவது அக்கிரமக்காரருடைய வஞ்சகமாகும். தங்களுடைய இச்சைகளையும், பாவ சந்தோஷங்களையும் நிறைவேற்றுவதற்காக அக்கிரமக்காரர் வேதவாக்கியங்களைப் புரட்டுகிறார்கள்.

"நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்" - கிறிஸ்தவருடைய ஆவிக்குரிய ஜீவியம் வளரக்கூடியது. சுவிசேஷத்தின் கிருபையும், ஆசீர்வாதமும் தேவனுடைய பிள்ளைகளிடத்தில் வளருகிறது. (1பேதுரு 1:23; யாக் 1:18). பரலோகத்திலிருந்து இந்த விசுவாச வித்திற்கு ஜீவத்தண்ணீர் பாய்ச்சப்பட வேண்டும். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை ஒவ்வொரு விசுவாசியும் பெற்றுக் கொள்ள வேண்டும். ஒளியில் நடந்து ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெற வேண்டும். (1யோவான் 1:7; 1பேதுரு 2:1-8).